**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 279/2016 |
| நாள் | 23.07.2025 |
| வா.சா.1 | அன்னலெட்சுமி |
| வயது | 47 |
| ஊர் | ஆர்.வெள்ளகவுண்டபட்டி |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2 வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

என்னுடைய கணவர் சிதம்பரம் என்பவரின்தகப்பனார்பெயர் சண்முகம்பிள்ளை என்றால் சரிதான். சண்முகம் பிள்ளை என்பவருக்கு வாரிசுகள் 1. நீலமேகம் (2 வது பிரதிவாதி) 2. பழனியம்மாள் (3 வது பிரதிவாதி) 3. சிங்கமுத்து (4 வது பிரதிவாதி) மற்றும் எனது கணவர் 1வது வாதி என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாக எனக்கும், எனது கணவருக்கும் இடையே நெருங்கிய உறவுமுறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தூரத்து உறவுமுறை உள்ளது. தாவா சொத்துககள் பூர்வீக சொத்துக்கள் என்பதை கேட்டு அறிந்து கொண்டேன். தாவா 2 முதல் 4 அட்டவணை சொத்துக்களை எனது கணவரின் தகப்பனார் சண்முகம் பிள்ளை, 2 வது பிரதிவாதி ஆகீயோர் கூட்டாக சேர்ந்து கடந்த 1961 ம் வருடம் கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான். கடந்த 25.11.2016 ம் தேதியன்று எனது கணவர் தாவா சொத்துககளில் அவருக்குண்டான பொறுத்து என் பெயரும், 3,4 வாதிகள் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்ததாக இவ்வழக்கில் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்தது பின்னிட்டு தான் எனது கணவர் கடந்த 09.12.2017 ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் கணவர் உயிருடன் இருக்கும் போது உயில் ஆவணம் எழுதி வைத்தது குறித்து வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் என்னுடைய வீட்டில்

வைத்து தான் என் கணவர் எழுதினார். உயில் ஆவணத்தை எழுதியவர் என்னுடைய மருமகன் கனகராஜ் என்றால் உயில் ஆவணம் எழுதிய போது அவர் என்னுடைய மருமகன் அல்ல. தற்போது தான் அவர் எனது மருமகன் ஆவார். உயில் ஆவணம் எழுதுவதற்கு எனது கணவர் 1வது வாதி சிதம்பரம் என்பவர் தான் கனகராஜ் என்பவரை வரவழைத்து ஏற்பாடு செய்தார். எனது கணவர் இறப்பதற்கு 2வருடங்களுக்கு முன்பு அவர் படுக்கபடுக்கையாக உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றும், அவரை சிகிச்சைக்காக படுத்தபடுக்கையாக தான் காரில் அழைத்து செல்வோம் என்றால் சரியல்ல. எனது கணவர் 1வது வாதிக்கு தொண்டையில் புற்றுநோய் இருந்தது. 1வது வாதி இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள அங்கமுத்து என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். மற்றொரு சாட்சியாக உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள சுப்ரமணியம் என்பவர் என்னுடைய தாயாரின் உடன்பிறந்த சகோதரியின் கணவர் ஆவார். எனக்கு சித்தப்பா முறை ஆகும். வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் 1வது வாதி சிதம்பரத்தினுயுடையது அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்தது பின்னிட்டு, நானும், 2,3 வாதிகள், கனகராஜ்,எனது சகோதரன் அங்கமுத்து, எனது சித்தப்பா சுப்பிரமணி ஆகியோர் கூட்டாக சேர்ந்து வா.த.சா.ஆ.12 உயில் ஆவணத்தை போலியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எனது மருமகன் கனகராஜ் பாக்கெட் பால் வாகனத்தை ஓட்டிவருகிறார். உயில் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டதால் தான் எனது மருமகனை வைத்து தயார் செய்துள்ளோம் என்றும், வா.த.சா.ஆ.12 உயில் ஆவணம உண்மையானது என்றால் பத்திர அலுவலகம் சென்று பத்திர எழுத்தரிடமோ அல்லது ஒரு வழக்கறிஞரை நியமித்து அவர் மூலமாகவோ தயார் செய்திருப்போம் என்றும் உயில் ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டதால் தான் என் மருமகனை வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை 1வது வாதி சிதம்பரம்

உண்மையாக எழுதி வைத்திருந்தால் அவர் பத்திர அலுவலகம் சென்று முத்திரைதாள் பெற்று உயில் ஆவணத்தை எழுதி பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றும், உயில் ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டதால் தான் அது முத்திரைத்தாள் கட்டணத்தில் எழுதாமல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 மற்றும் 3 கிரயம் செய்த சொத்துக்கள் எனது கணவரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டாக்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தில் எனக்கு கிடைக்கவேண்டிய பாகம் சட்டப்படி கிடைக்ககூடியது என்றும், 2 வது பிரதிவாதி நீலமேகம் பெயரில் வாங்கப்பட்ட தனிப்பட்ட சொத்துககளில் எனக்கு எவ்வித பங்கு உரிமையும் சட்டப்படி கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதி அவரது பெயரில் வாங்கிய தனிப்பட்ட சொத்துக்களை பொருத்து அவரது வாரிசுகளான 8,9 பிரதிவாதிகள்பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2 வதுபிரதிவாதி அவரது வாரிசுகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று நான் குறிப்பிடுவது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.